பட்டது. அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எல். எண்டத்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், அந்தக் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் அரசு உத்தரவின் பேரில் 1 ஏக்கர் நிலம் எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவ மனைக்காக ஒதுக்கக்கப்பட்டது. கட்டிடம் கட்டுவதற்காக அடித்தளப் பணிகள் முடிக்கப்பட்டது. திரும்பவும் எல். எண்டத்தூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்து, மறுபடியும் அந்த மருத்துவ மனைக்காக 25 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. மருத்துவ மனை கட்டுவதற்கு 25 செண்ட் நிலம் போதுமானதாக இல்லை. அதற்காக ஒரு ஏக்கர் நிலம் கண்டிப்பாக வேண்டும். இதன் காரணமாகத்தான் அங்கே கட்டிட வேலைகள் கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டன.

மேலும், பல வேலைகள அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கதவுகள், ஜன்னல்கள், பொருத்துவது போன்ற வேலைகள் நடைபெறவில்லை. அறுவை சிகிச்சைக் கூடம், சுவருக்கு சிமெண்ட் பூசும் வேலை, மற்றும் பல வேலைகள் நடைபெறாமல் இருக்கிறது. நிர்வாக காரணங்களாலும் வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களும் வேலையை முடிக்காமல் நிறுத்தி வைத்திருக்கின்றனர். அந்த வேலை துரிதமாக செய்ய வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஒப்பந்தக்காரர்களிடம் மறுபடியும் தெரிவித்துள்ளதாக, அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மேலூரில் இயங்கி வரும் கால்நடை மருந்தகத்தை மருத்துவ மனையாக்கும் திட்டம்.

509 —(*வினா எண். 21455) திரு க. வெ. விரானம்பலம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவ மனையாக்க (Hospital) அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) மேலூருக்கு அருகாமையில் தல்லாகுளம், பள்ளப்பட்டி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ மனைகள்

இயங்கி வருவதால், மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாக தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 9-50)

2. தகவல் கோரல்.

அ. பேரவையின் முன் வைக்கப்பெற்ற நஞ்சப்பன் கமிஷன் அறிக்கை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சேலம் கிச்சிப் பாளையம் லாக்-அப் மரணம் சம்பந்தமாக என்கொயரி ரிப் போர்ட் இன்றைக்கு அவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. செப்டம்பர் 30-ஆம் தேதியே அந்த அறிக்கை அரசுக்குக் கொடுக் கப்பட்டு இருக்கிறது. அதைப் பரிசீலித்து அரசு ஒரு ஜி. ஓ. வை 18 பிப்ரவரி 1984-ல் போட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இந்த அவையில் வைப்பதற்கு $1\frac{1}{2}$ மாதகாலம் தாமதமாகியிருக் கிறது. அறிக்கை கிடைத்த 6 மாத காலத்திற்குள் அந்த அறிக்கை மீதான ஆணையை அரசு வெளியிடவேண்டும் என்ற அடிப்படை யில் பிப்ரவரியில் அரசு ஆணையிட்ட பின்பும் $1\frac{1}{2}$ மாதம் கழித்து இந்த அவையில் வைப்பதற்கான காரணம் என்ன? இராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை வெளிவந்த ஒரு சில மணி நேரத்திற் குள்ளேயே அரசு அதன் ரெகமென்டேஷனை அவையில் அறி வித்தது. அதேமாதிரி இதற்கும் செய்து இருக்கலாம் அல்லவா? ஏன் இப்படி காலதாமதமானது என்பதைக்குறித்து அரசு விளக்கம் அளிக்குமா? நாடு பூராவையும் ஒரு பரபரப்பில் ஆழ்த்திய ஒரு சம்பவம் பற்றிய அறிக்கையை இங்கே காலதாமதமாக வைக்கக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமா நாத் அவர்கள் கிளப்பியிருக்கிற பிரச்சனை பற்றிய முழு விவரமும் சொல்லுகிற நிலைமையில் நான் தற்போது இல்லை. அது பற்றி விசாரித்து என்ன நிலைமை என்று கண்டறிந்து, தக்க நேரத்தில் விளக்கம் தருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY